உ
சிவமயம்

# இந்து சாதனம்

# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு.
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது
பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம் விரோதி வருடம் (1889) ஆவணி மீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: ?56

புத் - ௯0] யாழ்ப்பாணம் . காலயுத்தி வருடம் ஆனி மீ ௩0-ஆ வெள்ளிக்கிழமை (14 7 - 1978) [ஜூலை - ௧௩

# ஏட்டுச் சுவடியிற் பெரியபுராணம் எழுந்தருளப்பெறும் விழா

## கீரிமலைப் புனித நீர்க் குடத்துடன் பாலாவித் தீர்த்தக் கரைக்குப் பவனி

### இருபத்தோராண்டுகளான நடை பஜனை யாத்திரை இன்னமும் பொலிவுடன் இலங்கும் எழில்

பாலாவிக்குப் பாத யாத்திரையிற் பத்தர்கள் சென்றார்கள் முதன் முதலாக இருபத்தோராண்டுகளுக்கு முன். அன்று வழிகாட்டிய சைவப் பேரறிஞரே இன்றும் உள எழுச்சியுடன் முன்சென்றுகொண்டிருப்பது திருவருட் பேறே. அப்பொழுது பாதம் நோகப் பணியாற்றிய தொண்டர்களைப் பொன்னுவெளியில் வரவேற்ற பெரியாரே இன்றும் தொடர்ந்து தொண்டு செய்கின்றார். அரன் கருணையின் அற்புதம் இதுவே. அவ்வளவுமட்டுமல்ல. அந்தப்பெரியார் கைவண்ண ஏடுகளே இம்முறை பாதயாத்திரையின்விசேடம்.

இலக்கியகலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இந்நத் திரு ஏட்டு யாத்திரையை எடுத்துச் சொல்கிறார் இலக்கிய மரபிலே.

சிதம்பரத்திலே பெரியபுராணம் உதயமானபோது, அநபாய சோழ மகாராஜா சகல வரிசைகளுடனும் சென்று, புராணத் திருமுறையைப் பூசித்து, பெரிய புராணத்தையும் அதனை அருளிய சேக்கிழார் பெருமானையும் யானை மீது அமரச்செய்து, தாமும் பின்னே இவர்ந்து தமது கைகள் சாமரம் இரட்ட, வேதங்கள் வேதங்கள் கோஷிக்க, பண்ணிசை பரவ, வாத்தியங்கள் முழங்க, தில்லைவாழந்தணர்கள் வாயில்கள் தோறும் மங்கள விளக்கேற்றிப் பூமாரி பொழிய, மக்கள் வெள்ளம் கரைபுரண்டு ஆனந்தக் கூத்தாட வீதிவலம் வந்து சபாநாயகர் சந்நிதியில, பெரியபுராணத் திருமுறையை வைத்து, 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற திருநாமத்தைச் சேக்கிழார் பெருமானுக்குச் சூட்டி, அகம் மகிழ்வாராயினர். தமிழ உலகு சிவமணம் கமழ்ந்தது,

இந்த அமிர்த வைபவத்தை நினைவுகூரும்வகையில்,

திவ்ய க்ஷேத்திரமாகிய திருக்கேதீச்சரத்தில் தலவாசஞ் செய்பவரும தொண்டர்க்குத் தொண்டருமான திரு. அருளம்பல உடையார் அவர்கள் எழுதிய பெரியபுராணத் திருமுறைத் திருவேட்டை. அவர்கள எழுதிய திருவாசகத் திருமுறை ஏடு உட்பட மற்றைத் திருமுறைகளோடு ஒருங்கு சேர்த்து, யானைவாகனத்திலோ கேடகத்திலோ எழுந்தருளப்பண்ணி,

சைவப் பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள தலைமையிலே ஆண்டுதோறும திருக்கேதீச்சரம நோக்கி நடக்கும் பாதயாத்திரையை, யாத்திரையின் இருபத்தோராம முறையாகிய இப் புனித ஆண்டிலே,

பெரிய புராணத் திருமுறை இறுதியாய திருமுறைகளை முன்னிட்டுக் கொண்டு,

நகுல முனிவரும் மாருதப்பிரவல்லியும் தீர்த்தமாடி நோய் தீர்ந்து, மனததுயரான,

நகுலேச்சரத்திலிருந்து ஆரம்பிப்பதெனச் சங்கற்பித்து

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## நாளொரு வண்ணம் நயக்கும் நல்லூர்த் திருத்தலம்

ஆவணிப் பெருவிழாக்கள் ஆரம்பமாகப்போகின்றன வென்று நினைவூட்டுவான் போன்று முத்துக்குமாரசுவாமிச் சந்நிதானம் முத்து மண்டபமாக முகப் பொலிவு பெற்றுவிட்டது.

அருள் சுரந்து வரும் ஆறுமுகப் பெருமானை அடியார்கள இத்தலத்தில எங்கு நின்றாலும் தரிசனம காண ஏற்ற ஒழுங்குகள் ஆண்டுதோறும் நிகழ்வது இப்பூர்விக கோயிலுக்குரித்தான அழகான நியமம.

## வேல்விழாக் காட்சி மேல் விளங்கும் கொழும்பு மாநகர்

ஆடிவேல் என்றால் கொழும்பு மாநகர் ஆனந்த மயமாய்விடும். அலங்காரம் ஒருபுறம்; அரிய இன்னிசை விருந்து இன்னொரு புறம்; தேருலாச் சிறப்பு இவற்றுக்கெல்லாம் மேலாக இருக்கும். இந்த அரிய காட்சியைக் கொழும்பு மாநகர்வாழ் மக்கள் அனைவரும் கண்டு களிப்பெய்திக் கொண்டிருப்பர் அடுத்த வாரம்.

பல்லாயிரக் கணக்காகக் கூடும் பத்தர்கள் முருகன் கிருபையால் தங்களுக்காக அமைக்கப்படும் வசதிகளை ஆனந்தமாக அநுபவித்து வருகின்றனர் — முகாமை நிருவாகத்தின் முதன்மையைப் பாராட்டாதாரில்லை;



## குருநாதன் வருவான்!

அருணகிரி நாதர் அழைத்தகதிர் காமக்
குருநாதன் வருவான், குழைந்து — பெருமானை
மாணிக்க கங்கையிலே மாசகற்றிச் சிந்தனைக்
காணிக்கை நாம்செய்தக் கால்.

X X X

பாலாவி நன்னீரிற் பத்தர் பணிய வந்து
வேலாயு தன்வருவான் வேண்டுங்கள் — மேலான
கேதீச் சரத்திலம்மை அப்பன் கிருபையால்
ஆதீனம் ஆக்கும் அருள்.

## அமர்நீதி அடியார் அருந் தொண்டு

இடற்றினர் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
இவைசொல்லி யுலகெழும மேதக்
கடற்றினு ராவர் காற்றுளா ராவர்
காதலித் துறைதரு கோயில்
கொடிறினூர் வாதுங் குறைவிலார் தாம்போய்க்
கோவணங் கொண்டுகூத் தாடும்
படிறினர் போலும பாசனை நல்லூர்
நினைவெம் பசுபதி யாரே.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

அடியார் திருக்கூட்டத்தார்
## தில்லைத் தரிசனம்

யாழ்ப்பாணம் நல்லூர் பஜனைச் சபையின் தலைவர் "சிவநெறிச் செல்வர்" சி. விநாசித்தம்பி அவர்கள், சபைச் செயலாளர் ஆனைக்கோட்டை திரு. ந. நவரத்தினம் ஆகியோர் தலைமையில் அடியார் திருக்கூட்டத்தார்கள் தெனிந்திய தல யாத்திரைக்காகப் புறப்பட்டுவந்து திருவறைக்காடு திருப்பெருந்துறைமுதலான பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு தில்லையம்பதி ஆனித் திருமஞ்சன மகோற்ஸவத்தின் திருத்தேர் - தரிசன விழாக்கள் யூலை 10 11 இருதேதிகளிலும் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மை சமேத ஸ்ரீநடராஜப் பெருமானைத் தரிசனஞ் செய்துகொண்டு இங்குள்ள புண்ணிய நச்சி திருமடத்தில் 8-வது முறை அன்னதானங்களைச்செய்து வைத்துள்ளார்கள. நல்லூர் பஜனைச் சபையார் தில்லையம்பதிக்கு வரும் அடியார் கூட்டத்தினர் மேலும் அன்னம்பாலிப்பை நன்கு அளித்துக்கொண்டுவருகின்றதை ஊக்குவித்து அனுப்பி வைக்க வேண்டும்.

(எமது சிதம்பரம் நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

காலயுத்தி ஞ ஆனி மீ ௩0 உ வெள்ளி

# என்ன புண்ணியம் செய்தனை என்று எண்ணப் பணி இயற்றுவோம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே' என்று ணரவைக்கும் நிமத்தைப் புரியும் நெறியை முன்னிருந்த பெரியோர்கள் பின்பற்றி வந்தனர். அவ்வழியில் நாடு சிறந்து வளர்ந்தது' தெய்வ வழிபாடு சீராக ஓங்கியது, ஆலயத் திருப்பணி வேலைகள் சால விளங்கின.

இன்று அந்நிலை ஏன் இயங்கவில்லை என்று சற்று யோசிப்பது நன்று.

முன்போல ஆலய தரிசனம் செய்பவர்கள் இருக்கின்றார்கள். அன்னார் எண்தொகை கூடிக்கொண்டு வருகின்றது. எவரும் சைவநெறி இகழ்கின்றதா என்பது கேள்விக்கிடமாயிருக்கின்றதே?

கோயிலில் நிகழவேண்டியனவற்றுடன் விலக்கப்பட்டனவற்றையும் காண்கின்றோம் வெறுக்கப்படவேண்டியவற்றைக் கண்டு களிக்கவே ஆயிரக்கணக்கானோர் செல்கின்றனர். நற்கருமத்துக்குச் சற்றேனும் ஆதரவில்லையே!

திருக்கேதீச்சரத் திருத்தொண்டுப் பெரியார் ஒருவர் வயோதிப வேளையிற் கையில் எழுத்தாணி தரித்துப் பனை ஓலை இதழ்களிலே திருத்தொண்டர்புராணத்தையும் ஆங்கு குறிப்பிடப்பெற்ற தேவாரங்களையும் திருவாசகம் முழுவதையும் படி எடுத்த ஏடுகள் சென்ற வாரம் புனித புண்ணிய கீரிமலைத் தீர்த்தக் கரையிலிருந்து உரிய பூசைக் கிரமத்துடன் ஊர்வலமாக நகுலேசுவரத்துக்குக் கொண்டுசெல்லப்பெற்றுப் பின் பெரிய புராண வசனப் பெரியார் நாவலர் அவர்கள் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் வரவேற்கப்பெற்று வண்ணைச் சிவன் கோவிலில் வாழ்த்தப்பெற்று நல்லை ஆதீனம் நல்லை திருமுருகன் வழிபாடு கண்டு மாதோட்ட நன்னகரிற் பாலாவி ஆற்றுப் பாங்கரில வானளாவ மேவியிருக்கும் திருக்கேதீச்சரத்தில நித்திய பூசைக்காகத் திருமுறைப் பிரகார மண்டபத்தல மெய்யன்பர்கள் புடைசூழ வைக்கப்பெறும்.

இந்த எழுச்சியான நிகழ்ச்சியிற் பங்கு கொண்டவர்கள் சிறு கூட்டம் எனினும் திருக்கூட்டமே. வழமையாகக் கோயிற் திருவிழாக்களிலே கோலாகலக் காட்சி காணக் கூடுகின்றவர் கண்ணுக்கு இந்த வைபவம் தோற்றவில்லையே! தப்பு பூசையை ஒப்புக்கொள்ளும் தரத்தவர்களுக்கு இப்படியான நிகழ்சிகள் எப்படி இணங்கும்!

ஒருநாள் ஒருபொழுதாயினும் பெருமானை நினைந்துருகும் கருமத்தில் ஈடுபடும் எண்ணம் சைவசமயத்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு உதிப்பது எந்நாளோ?

பழைய காலத்திலே கதிர்காம யாத்திரைக்கு பல அடியார்கள் மூன்று திங்கள்களுக்கு முன் நிகழும் வற்றுப்பளைப் பொங்கலுடன் திருகோணமலை, மட்டக்களப்பு வழியாக நடந்து பயபத்தியுடன் செல்வர். இப்பொழுது அவ்வாறு நிகழ்வது அரிது.

இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன் கதிர்காமம் செல்ல முடியாத நிலை உண்டானது. அப்பொழுது பாத யாத்திரிகர்களிற் சிலர் பாலாவிக் கரையை நோக்கித் தமது பணியைச் செய்யத் தொடங்கினர். இச்சிவனடியார் திருக்கூட்டம் இன்றும் இப்புண்ணியத் தொண்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது இந்தத் திருக்கூட்டம்தான் ஏட்டுப் படிகளைத் திருக்கேதீச்சரத்துக்கு எடுத்துச் செல்கின்றது.

பரிசுத்தமான பாதயாத்திரையின் பயன் எப்படியிருக்கும் என்பதைத் திருத்தொண்டர் புராணம் விரித்துரைக்கின்றது. அத்தகைய உத்தம பெரியபுராணப் பாட்டுக்களையும் தேவாரப் பதிகங்களையும் திருவாசகப் பாக்களையும் ஏட்டில எழுதிய பெரியார் என்ன புண்ணியஞ் செய்தார் என்று எண்ணி நாமும் அவ்வாறு நற்பணியில் நண்ண வழி வகுப்போமா?

## பூசைக்கு உரிய நிர்மாலியம்

புட்பவிதிச் செய்யுள் இரண்டிற்கு
**வித்துவான் ந. சுப்பையபிள்ளை உரை**

இன்ன இன்ன பத்திர புஷ்பங்களிலே நிர்மாலியமும் ஆகும் என்பது

"செழித்திடுந் துளபமும் சிறந்த வில்வமும்
வழுத்துபொன் மத்தமும் அலரும் நீலமும்
அழுக்கசெம் பொன்மல ரதனைப் போலவே
கழித்ததிர் மாலியம் கழுவிச் சாத்தலாம்."

—புட்பவிதி 10-ம் செய்யுள்

அரும்பதவுரை: செழிந்திடுந்துளபம் - (சிவனுக்குச் சாத்தற்கு உரிய) வெண்துளசி; பொன்மத்தம் - பொன்னூமத்தம் பூ. அலரு நீலம் - மலர்ந்த நீலோற்பலம். செம்பொன்மலர் - பொன்னாற் செய்த மலர். கழித்த நிர்மாலியம் - சுவாமிக்குச் சாத்திப் பூசை முடிவில் கழித்து நீக்கிய பத்திர புஷ்பங்கள். கழுவிச் சாத்தலாம் — திரும்ப (மீள மீள)க் கழுவிச் சாத்தலாம் (அருச்சிக்கலாம்).

X X X

"அம்புயம் ஏழுநாள் அலரி மூன்றுநாள்
வம்பவிழ் உடலையில் வைத்துச் சாத்தலாம்
நம்பிடு நறுமலர் நண்ணிடாவிடில்
தயபழுப்(பு) அரும்(பு) இலை தளிரும் சாத்தலாம்"

புட்பவிதி 11-ம் செய்யுள்:

அரும்பதவுரை: அம்புயம் - தாமரைப்பூ. அலரி - செவ்வலரி வெள்ளையலரிப் பூக்கள், (இந்த வகை அலரிப் பூவே மூன்று நாள் வரை நிறம் மங்காமலும் வாடாமலும் குடலைக்குள் வெப்பந் தாக்காதபடி நீர் தெளித்துப் பாதுகாத்து வைக்கச் செழிப்புடனிருப்பனவாகும்.) இந்த இருவகைப் பூக்களும் கிடைக்காத போது இவற்றின் பழுப்பு இலைதளிர் அரும்பு ஆகியவற்றையும் சாத்தலாம். (அரும்பு - விரியாத பருமுள்ள பெருகு பு

---

## மாணுக்கர்களே,
## 1978 மார்கழி க. பொ. த. பரீட்சைக்கு ஆயத்தமா?

புதிய பாடத் திட்ட சைவ சமய நெறி
9-ஆம் 10 ஆம் வகுப்புகளுக்கு

**'இந்துசமய'த்தில் ஏற்றமான சித்தி எய்தச் சபையாரின் 'சைவசமயநெறி' உங்களுக்கு இன்றி அமையாதது.**

புதிய பாடத் திட்டத்தின்படி இந்து சமயம் என்ற பாடத் திட்டத்திலே எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்கு எழுதவேண்டிய மாணுக்கர்கள் அப்பகுதியிற் பூரண ஆயத்தம் பெறுக்கொள்ளக்கூடிய வகையிலே சபையாரின் வெளியீடு விளங்குகின்றது,

எவ்வாறெனின்:

(அ) பாடத்திட்டத்தின்படி படிப்பதற்குரிய விளக்கம் மாணுக்கர்கள் தாங்களாகவே புரிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

(ஆ) இந்த வெளியீட்டின் பயனை அனுபவிப்பவர்கள் க. பொ. த. பரீட்சைக்கு மட்டுமன்றி சைவ சபைகள் நடாத்தும் சித்தாந்தப் பரீட்சைகளுக்கும் சைவ அறிவுப் பரீட்சைகளுக்கும் உரிய ஆயத்தத்தை அடைபவர்கள் ஆவர்.

(இ) திருவருட்பயன் உரை சைவசித்தாந்தப் பேரறிஞர் வைசைப்புலவர் சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் செய்ததாகும்.

(ஈ) பாடத்திட்ட திருமுறைப் பாடல்களை முழுப் பதிகமூலம் கற்றுக்கொள்வது அதற்குறை நன்கு விளங்க உதவியாயிருக்கும்.

எனவே ஒருமுறையிற் பலவித பயனை மாணுக்கர்கள் பெறச் சைவபரிபாலனசபை நெடுங்கால அனுபவத்தை முன்வைத்து சைவசமயநெறியென்னும் தொகுப்பை அளித்திருக்கின்றது.

குறிப்பு:- சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் உரையையே படிக்கவேண்டுமென்பது கல்விப் பகுதியாரின் ஆலோசனையாகும்.

---

## ஏட்டுச் சுவடியிற்..

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

பாதயாத்திரைத் தொண்டர்கள் உட்படத் தொண்டர்கள்சூழ மாம்புடைசூழ்ந்து, திருமுறைப் பாடல்களைப் பண்ணுடன் முழங்கச் செய்து சேவிக்க,

நகுலேசுவரப்பெருமான் சந்நிதியை அணுகி, ஆராதனைகள் வழிபாடுகள் செய்து, நகுலேசுவரப் பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு, அடுத்த நாள்,

பெரிய புராணத்தை வசனஞ் செய்தவர்களும், உண்மை நாயன்மார் மகிமையைப் புலப்படுத்தியவர்களுமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தரித்து, அங்கு நிகழும் புனித நிகழ்ச்சிகளில் மூழ்கித் திளைத்து,

மூன்றாவது நாள்,

நாவலர் அவர்கள் சைவப்பிரகாசத்துக்குக் கால்கோள் செய்த, வண்ணை வைத்தீசுவரப் பெருமானை வணங்கி வலம் வந்து, அங்கே நிகழும் நிகழ்ச்சிகளாக புத்துணர்ச்சி எய்தி, வைத்தீசுவரப் பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு, நான்காவது நாள்,

நல்லை ஆதீனத்தில் ஆசி பெற்று, அதன் மேல், நல்லைத் திருமுருகனை வலம் வந்து, முருகன் திருவருளால், எதிர்ப்படும் கிராமங்களைப் புனிதஞ் செய்து, பக்தியைப் பெருக்கும் முகமாக பூநகரி முதலிய கிராமங்களுக்கூடாக, பல்லவராயன கட்டுக் கடந்து, மூழ்ங்காவலில் ஓங்காரமுதல்வியவிநாயகப்பெருமானை வணங்கி அப் பெருமான் முன்னின்று வழிகாட்ட,

பாலாவியை அணுகி, ஆங்கெழுந்தருளியிருக்கும் பிள்ளையாரை வலம் வந்து துதித்து, ஸ்ரீகௌரியம்பாள் சமேத திருக்கேதீசுவரப் பெருமானின் திருச்சந்நிதியை அடைந்து, ஆனந்தம் மிக்கூர்ந்து, திரு வீதியை வலம் வந்து, உள்ளே பிரவேசித்து

திருக்கேதீசுவரப் பெருமானையும் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானையும் நின்றபடி நின்று, ஒருங்கே தரிசித்து,

திருமுறைகளைத் திருச்சந்நிதியில் ஹர ஹர கோஷத்துடன் வைத்து,

புராணத் திருமுறையை ஏட்டில வரைந்த பெரியாரைப் பூரிக்கச் செய்து,

அநபாய சோழ மகாராஜாவின் ஆசி அப் பெரியாருக்குக் கிடைப்பதாக என்று பாவனை செய்து,

'திருமுறைத் தொண்டர்' என்று உடையார் அவர்களுக்கு திருநாமம் சூட்டி,

திருக்கேதீசுவரத்தில் நீண்ட காலம் தலவாசஞ் செய்து, திருமுறைத் தொண்டு புரிந்துகொண்டு,

திருமுறைத் தொண்டர் திரு. அருமைபலம் உடையார் அவர்கள் வாழ்வாங்கு வாழ்வார்களாக என்று,

பாதயாத்திரைத்தொண்டர்கள் சகிதம் திருவருளைப் பிரார்த்தித்து வாழ்த்துவோமாக. வணக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வைத்தியம்

வைத்தியகலாநிதி, க. பொன்னம்பலம்
இளைப்பாறிய ஆயுர்வேத மருத்துவ உத்தியோகஸ்தர், பூநகரி.

சுதேச வைத்தியக் கலையும் சுதேச வைத்தியர்களும் இன்று அந்தஸ்துடனும் கௌரவத்துடனும் பேணிக் கௌரவிக்கப் படுகின்றனர். அந்நியர் வருகைக்கு முன்பு சித்தர்களால் அருளிச் செய்யப்பட்ட இக்கலை வைத்திய சிரோன்மணிகளால் பாது காக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது. அன்னியர் ஆட்சியில் அவை எரிக்கப் பட்டு, நசுக்கப்பட்டு, செல்லரிக்கப் படும் வகையில் மறைக்கப்பட்டன. ஆனல் சுதந்திர இலங்கையின் தோற்றத்துடன் இக் கொடுமைகளுக்கு எல்லாம முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது 1948இல் இருந்து 1955 வரை பரம்பரை வைத்தியர்கள் தமது ஏடுகளைப் புரட்டிச் சிறிய சிறிய அளவில் சித்த வைத்தியத்தை வடக்கிலும், கிழக்கிலும், ஆயுள்வேதத்தை ஏனைய பகுதிகளிலும் மின்மினிகளாக கண்சிமிட்டி நிற்கச் செய்தனர்.

## புதிய சகாப்தம்

சுதேச வைத்தியத்தின் வரலாற்றிலே 1956ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாக அமைகின்றது. இக்காலம் தொட்டே ஆட்சியாளரின் இறுக்கமான ஆதரவுக்குள் வைத்தியர்களும் வைத்திய முறைகளும் உட்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை முழுவதும் பலமான வைத்திய சங்கங்கள் உதயமாகிச் செயல்படத் தொடங்கின. இவற்றின் ஏழ்மைக் குரலும், நாட்டின் தட்பவெட்ப காலநிலைக்கேற்ப சிறப்பம்சங்களும், ஆட்சியாளரின் கைகொடுப்பும் சுதேச வைத்தியத்திற்கு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது.

## வளர்ச்சிப் பாதை

தனியார் அமைப்பு முறையில் பணத்திற்கு முக்கியத்துவம் கொடாது சேவை மனப்பான்மைத் திட்டத்தின் கீழ் இயங்கி வந்த இம்முறை வறுமையின் பிடியில் ஆரம்ப காலத்திலிருந்தது. உள்ளூராட்சி ஸ்தாபனங்களில் இக் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்ததை அடுத்தே இத் துறையில் நிரந்தரமான ஒரு வளர்ச்சி ஆரம்பமானது. கல்லூரி விஸ்தரிப்பு, வைத்தியசாலைகள் பரவற்படுத்தல், மக்களைக் கவரக்கூடிய செயற் திட்டங்கள் காலகாலம் ஏற்பட்டு வந்த படிமுறை வளர்ச்சியாகும். இலங்கையின் வைத்திய அமைப்பு முறையிலே மேலைத்தேய வைத்திய முறைக்கு சரிநிகர் சமானமான சிங்காசனம் ஏற்பட வேண்டும் என்ற ஒருநிலை 1970ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு ஏற்படுகின்றது. அதன் அடிப்படையில் ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபன அமைப்பு ஏற்படுத்தப் பட்டது. புதிய ஆராய்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. இன்று இத்துறை தனக்கெனத் தனியானதோர் பாதையிலே சென்றுகொண்டிருக்கின்றது.

## பொருளாதார நலனும் அந்நியச் செலாவணி மீதியும்

இலவச வைத்திய வசதிக்காக நப் நாடு ஆண்டொன்றிற்கு பல இலட்சம் ரூபாய்களைச் செலவழிப்பதுடன் பல இலட்சம் ரூபாய்கள் அந்நியச் செலாவணியாகச் செலவழிக்கப்படுகின்றது. நம் நாட்டிலுள்ள மூலவளங்களை, மூலிகைகளைப் பயன்படுத்தி மருந்துகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் வெளிநாட்டிற்கு கொடுக்கும் பணத்தை மிச்சம் பிடிக்கலாம். இது மட்டுமா? நமது காலநிலைக்கு உகந்த மருந்துகளைப் பாவிப்பதன் மூலம் நிரந்தரமான சுக வாழ்வைப் பெறலாம். பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கலாம். இவ்வாறான திட்டமிடல், சுதேச வைத்திய விருத்திக்கும் நாட்டின் பொருளியல் நலனுக்கும் சிறந்ததாகும்

## குறைபாடுகளும் தீர்வும்

சுதேச வைத்திய வளர்ச்சிக்கு அகரீதியான, புறரீதியான பல தடைகளை இங்கு கூற முடியாவிட்டாலும் சேடமாக,

1. வைத்திய மணிகள் தங்களிடமுள்ள சிறந்த முறைகளை வெளியிடத் தயங்குகின்றனர்.
2. ஆராய்ச்சி செய்வதில் அக்கறைக் குறைவு.
3. மக்களின் மனப்பாங்கினை இவ் வைத்தியமுறை கவரவில்லை.
4. அரசின் வைத்திய வளர்ச்சிக்கான மூலதன ஒதுக்கீடு குறைவு.

இக்குறைபாடுகள் நீங்குகின்றபோது நம்நாட்டில் சுதேச வைத்தியம் 65% மேற்பட்ட வளர்ச்சியை எய்திவிடும்.

## எதிர்காலம்

சுதேச வைத்தியம் ஒளிமயமாக உருவாக கல்வி அமைப்பில் அடிப்படை மாற்றங்களைச் செய்யவேண்டும் பல்கலைக்கழக மட்டத்தில் ஆராய்ச்சிகளும் படிப்பினையும் ஏற்படவேண்டும்.

மாவட்டங்கள் ரீதியாக வைத்திய சங்கங்கள் அமைக்கப்பட்டு விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன் நூல்கள் பல வெளியிடப்பட வேண்டும்.

அரசின் பூரண ஆதரவு வேண்டும்.

ஆயுர்வேத மருந்து சங்க ஆண்டுமலர் (1978)

# அமர்நீதி அடியார் அருந் தொண்டு

(1-ஆம் பக்கத்தொடர்ச்சி)

திருப்பந்தணை நல்லூரிற் பாடியருளப் பெற்ற பதிகத்தில் முதலாவது தோத்திரம் ஆகும் இப்பாட்டிலே அனடியார்களை அமர்நீதி நாயனர் பணிந்து பணியாற்றிய முறையைத் திருஞானசம்பந்த சுவாமிகள் அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றார். மூன்று திருமுறையிலுள்ள இப்பதிகப் பண - புறநீர்மை - ஈசன நாமம - பசுபதியார் உமாதேவியார் ஆடிய பந்து வந்தணைந்த ஊராதலின் பந்தணை நல்லூரெனும் பெயர் பெற்றது. இப்பதியைப் பந்தநல்லூர் என்றும் அழைப்பது வழக்கம், ——

# அடியார்களை அடியார்கள் போற்றும் அரிய நெறி

(முன் வளர்ச்சி — 2)

முருகநாயனரை முதலாங் குரவர் மனத்தில் வைத்து தேவாரம் பாடினர் என்ற முன்னொரு இதழில் சுட்டிக் காட்டினேம்.

அதே பதிகத்தில் ஞான சம்பந்தப் பெருமான இத் [illegible]

திருக்கின்றதைக் காட்டுகின்ற இன்னுமோர் தேவாரம் காண்க.

பட்டம் பால்நிற மதியம்
படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நல்லிருள் ஆடும்
நாதனர் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையோ டாடும்
பூம்புக லூர்த்தொண்டர்
போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும்
வர்த்தமா னீச்சரத் தாரே.

தொண்டர் என்பது முருக நாயனரை, ——

கவிஞர் சிகாமணி பிரம்மஸ்ரீ கா. அப்பாச்சாமி ஐயர் அவர்கள் இயற்றிய

# நகுலகிரிப் புராண மூலமும்

இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய உரையும்

# சிவபுராண படன விதி

(இஃது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களாற் பதிப்பிக்கப்பட்ட கந்தபுராண புத்தகத்திலிருந்து தொகுக்கப்பட்டது)

1 சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு உரிய இடங்களாவன:- தேவாலயம், திருமடம், நதிக்கரை, குளக்கரை திருநந்தனவனம், யாகசாலை முதலிய சுத்த ஸ்தானங்களாம்,

2 சிறியோர்கள் களிக்குமிடத்திலும் சூதாடுமிடத்திலும், பெண்கள் உண்டாட்டுச் செய்யுமிடத்திலும், அறிவில்லாதவர்கள் இருக்குமிடத்திலும் புராணம் படிக்கலாகாது.

3. திருக்கோயிலே சிவபுராண மண்டபஞ் செய்வித்து, அதிலே சிவபுராண புத்தகத்தைப் பீடத்தின்மீது வைத்து, நாடோறும் விதிப்படி பூசை செய்து கொண்டுவரின், அது கோடி சிவலிங்கப் பிரதிட்டைக்குச் சமமாகும்.

4 சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு அதிகாரிகளானவர் உடற் குற்றங்கள் இல்லாதவராய் நல்லொழுக்கமுடையவராய் நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து, இலக்கண நூலிற் பயின்றவராய், நீதி நூல்களையும் சைவ நூல்களையும் ஓதியுணர்ந்தவராய் சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய நித்திய கருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவராயுள்ளவர்.

(வளரும்)

## நூல் வெளியீடு

கோப்பாய் - எஸ் சிவம் அவர்கள் எழுதிய அன்னை பராசக்தி' எனும் நூல் வடகோவைக் கலா மன்றத்தினரால் 2-7-7 வெள்ளிக்கிழமையன்று கோப்பாய் வடக்கு சித்திர வேலாயுத சுவாமி கோவில் முன்றலில் இரவு 7 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படும்.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் தலைமையில் நிகழவிருக்கும் இவ் விழாவில் பல கலை நிகழ்ச்சிகளும் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன

## தேவை

காரியாலய காரிய சகாயர் பியோன், அச்சுக்கோப்போர் தராதரப் பத்திரங்களுடன் எங்கள் அலுவலகத்தில் சமுகம் தரவும்.

அதிபர்
சைவப்பிரகாச
அச்சியந்திரசாலை
450, காங்கேசன்துறை வீதி,
14-7-78 யாழ்ப்பாணம்

## வளையமும் — மகளிரும்!



பத்தர்: "பெண்கள்தோடு அணிவதே சிறப்பு; திருமுறையும் - 'தோடுடைய செவியன்' என்றே பேசுகிறது; இன்றைய உலகின் போக்கே போக்கு! சின்னஞ் சிறியவர்கள் - ஆம்! சிறுமிகள் காதுகளில் அணியும் வளையங்களைப் போல - அதிலும் பாரிய வளையங்களை மாட்டிக் கொண்டு 'தாய்மை நிலை' யடைந்த பெண்கள்கூடச் சிலர் உலா வருகிறார்கள்! இதுவா நந் தமிழர்சால்பு?

இவ்வாறு, திருமுறை ஏடு வரவேற்பு நாயன்மார்கட்டில் நிகழ்ந்தவமையம், கருத்துரை வழங்கிய எழுந்தாளர் - சைவப் புலவர் க. சி. குலரத்தினம்ஐயா கூறினாரே! அறிந்தீரா?

சித்தர்: "கூறினர்; மிக உருக்கமாக — பெரும் வேதனையோடு சொன்னர்! நம்நாட்டில் மழை பெய்யவேண்டும்; நாடு செழிக்க வேண்டும்! இவைகளை நல் நங்கையர்கள் உணரவேண்டும் என விண்ணப்பித்தார். சிந்திப்பார்களா? தோடு துலங்குமா?

(நாயன்மார்—தாதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

ஆக்குகின்றான் முன் பிரிந்த இருபத்தஞ்சு
ஆக்குகின்றான் அவன் ஆதிஎம் ஆருயிர்
ஆக்குகின்றான் கர்ப்பக் கோளகை யுள்ளிருந்து
ஆக்குகின்றான் அவன் ஆவது அறிந்தே.

He reassembles the twenty-five (tatwas) that fell as under previously, He the ancient Lord makes the soul to enter (the body so assembled), He performs this seated inside the womb, He does all this as He knows what is due to be done (in accordance with the soul's deserts).

Hindu Organ

Friday, July 14, 1978.

# GRANARY OF THE EAST AGAIN IN GEAR!

The most striking news of the Dharmista Regime in its first year of administration relates to the export of rice and paddy from our Island to foreign countries.

Sri Lanka has to its credit two pet names: The Pearl of the Indian Ocean is quite a fascinating description; equally honouring is the term 'Granary of the East'.

But unfortunately the Granary became empty too early; and our country had to import rice from outside at great cost.

The Green Revolution of 1965, however, helped to ease the problem a bit; but before long the succeeding government scorched the green and eventually the harvests became dearer.

History had repeated itself so regularly that in 1977 a New Regime came into power and immediately started to re-organize the Green Revolution. The Elements themselves became actively sympathetic and now the country is having in its stock surplus of produce. It is undoubtedly a remarkable achievement of which the people should be really proud. At this juncture of changing fortunes, the Government would do well to consider whether this bumper produce will be the order in the future, uninterupted and undiminished. To be proud of the past is justifiable, but to grow over-enthusiastic is not wise.

Self-sufficiency in the staple food of rice must be steadily sustained for a period of several years before the Government makes export of this commodity a regular feature.

Now for the G r a n a r y to be brimful and overflowing, the people who produce these grains should be able to sustain themselves speedily and live contentedly. For this purpose, the country's systems of transport, communication, technical establishments and supply of electricity must be adequate and efficient. Hence the Authorities would do well to make the best use of fortune's favour and build up a sound economy on the basis of self-sufficiency

## Wanted

Peon and Compositors, immediately call with testimonials at our office.

Manager
Saiva Prakasa Press
14-7-78 450, K. K. S. Road, Jaffna

# Mahatma Gandhi's Ideology

By S. SIVASUBRAMANIAM
Hony. Secretary, Council for National Unity and Welfare.

(continued from last issue)

Secondly, in India itself, there is practically nobody who could be considered the successor of Mahatma Gandhi. Shri Morarji Desai, the present Prime Minister, one of the worthiest men in the world today, when an American Newspaper representative compared him with Mahatma Gandhi, told the interviewer not to dishonour Mahatma Gandhi by comparing him (Shri Morarji) with that noble personality. Messrs. Achariya Bhave and Sri Jayaprakash Narayan also disclaimed to be on the same footing as Mahatma Gandhi and exhorted people not to think or say so.

Thirdly the situation in South Africa and India where Mahatma Gandhi had to contend against the Boers and the British respectively were entirely different from the circumstances and conditions prevailing both in India and Sri Lanka at present. Both our countries (India and Sri Lanka) have regained their National Independance and are not pitted against any foreign country.

Fourthly, It is important to recollect that Mahatma Gandhi led a loyal and full time life of total dedication and self sacrifice for his country. He led a life of poverty and celibacy. He had given up his legal practice and undergone immense suffering.

Fifthly, Mahatma Gandhi used to say that he had made "Himalayan Blunders" and used to retrace his steps. None of our leaders past and present have admitted that they make blunders even though all of them (without exception) are not infallible.

Sixthly, the procedure adopted by Mahatma Gandhi was against Foreign Aggression and not against any National Government of India.

Seventhly, M a h a t m a Gandhi was a believer in Ahimsa which included abstinence from killing even animals and was a complete Vegetarian and and Teetotaller It cannot be said that our leaders are all adherents of Ahimsa to that extent.

8. The methods of direct action of whatsoever nature, civil disobedience, violation of laws, preventing students from continuing their studies, boycotts of law courts, boycott of Govt. offices etc which Mahatma followed in India are entirely inapplicable in Sri Lanka at this juncture.

9. The method of propaganda, pursuasion, negotiation and parliamentary proceedings are preferable to the method of boycott, Civil Disobedience and Direct Action.

10. It is important to realise that Sri Lanka is a small country termed a developing country It is dependent on what is called Foreign Aid. We are also militarily and in every respect weak in a world full of countries armed to the teeth. Hence we cannot afford to have civil disturbances and chaos or circumstances leading to chaos or civil disturbances.

11. In all the circumstances, it is best for Sri Lanka and for all sections of the people to follow the procedure followed by leaders like Sri Arumuga Navalar, Mr. Charles Ambrose Lorensz, Sir Ponnambalam Ramanathan and many others. All of them adopted the, method of propaganda pursuasion, negotiation and were not in favour of any kind of direct action or civil disobedience or boycott. Mere abstinence from the use of physical force was not the only item in Mahatma Gandhi's method of action. It was only one item. A good number of his other methods are inapplicable in Sri Lanka.

12. It is important to realise that even in India, Mahatma Gandhi had to acquiesce in the formation of a State based on force. Every Government in the world is based on force, and the Government of India is no exception.

( To be continued)

## Saiva Periyar Centenary Reproduction

## GLORIES OF SHAIVAISM

*By S. Shivapadasundaram B. A.*

(continued from last issue)

It has thus been possible for us to have in Tamil the Shivagnana-bodham which is the essence of the Shivagamas. Meihandadhevar taught this to his disciple Arulnandhi Shivam and asked him to expand Shivagnanaboddam into a comprehensive Agamic work. Arulnandhishivam, therefore, enlarged it by introducing a good deal of matter taken from the Agamas and named Shivagnanasiddhiar. Commentators of Shivagnanasiddhiar refer to seventeen Shaivagamas which contain truths identical with some of these found in Siddhiar. Arulnandi supplemented Siddhiar by Irupa-irupahthu. Our Agamas are thus safe in our own language in the works of Meihandar and Arulnandiar, Agamic truths are also found in Devaram. Arulnandi Sivam's disciple's — disciple Umapathi-Sivam, is said to have written eight works such as Shivapragasam and Thiruvarudpayan which contain some Agamic truths. Three Saints who preceded Meibandar wrote Tiruvunthiar, Tirukalitupadiar and Unmaivilakkam. These fourteen works are now called Meihanda Shashtrams. To these may be added Shivadharmothram and Sadashivarupam of which the former is derived from Sravakta Agama and the latter is a translation of a portion of Vathula Agama.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, July 14, 1978.

EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org